செய்தி வெளியீடு எண் : 155 நாள் : 06.12.2022

## மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு.ஆர்.என்.ரவி , அவர்களின் முப்படை வீரர்களின் கொடி நாள் செய்தி .

தேசத்தின் ஒருமைப்பாடு மற்றும் கௌரவத்தைப் பாதுகாக்க வீரத்துடன் போராடிய வீரர்களின் நினைவாக 1949 ஆம் ஆண்டு முதல் டிசம்பர் 7 ஆம் தேதி முப்படை வீரர்களின் கொடி நாள் தினம் அனுசரிக்கப்படுகிறது.

முப்படை வீரர்கள், தேசத்தின் பாதுகாப்பு மற்றும் ஒருமைப்பாட்டின் சின்னம். தேசத்தின் மீதான அவர்களின் தளராத விசுவாசமும், கடமையில் நேர்மையான பக்தியும் இந்தியாவை வலுவான தேசமாக மாற்றியுள்ளது. வெளி ஆக்கிரமிப்பு, உள்நாட்டுக் குழப்பங்கள், இயற்கையின் சீற்றம் போன்றவற்றை எதிர்கொண்டு தேசத்தின் நலன்களைப் பாதுகாப்பதில் அவர்கள் ஆற்றிய தியாகம் மக்களின் அபிமானத்தைப் பெற்றுள்ளது. முப்படை வீரர்களின் இளமை மற்றும் சிறந்த பகுதியை தேச சேவையில் செலவிட்டதால், அவர்கள் முப்படையை விட்டு வெளியேறும் போது, அவர்களுக்கு நமது நன்றியை காட்ட வேண்டியது அவசியம்.

முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் நலனுக்காக பயன்படுத்தப்படும் கொடி நாள் நிதிக்கு கணிசமான பங்களிப்பை வழங்கும் பொன்னான வாய்ப்பை மக்களுக்கு வழங்குவதற்காக முப்படை வீரர்கள் கொடி நாள் தினம் நினைவுகூறப்படுவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

முப்படை வீரர்களின் கொடி நாள் நிதிக்கு தமிழக மக்கள் தாராளமாகப் பங்களிக்குமாறும், நாட்டுக்காக அவர்கள் செய்த தியாகங்களுக்கு நமது நன்றியைத் தெரிவிக்குமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

---

ஆளுநர் மாளிகை , சென்னை-22 வெளியீடு:

நாள் : 06.12.2022 இணை இயக்குனர் (ம.தொ .)